# 10

# “சபை” என்றால் என்ன?

இன்னொரு நாடு மற்றும் கலாச்சாரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் அமெரிக்கா நாட்டில் நீண்ட நாள் சுற்றிப்பார்க்கும்படியாகப் பயணம் செய்வதற்கு விரும்பினார். ஆங்கிலம் கற்றுக் கொள்ளக் கடினமாக உழைத்த அவர் தமது பயணத்திற்குத் தாம் தயாராகி விட்டதாக நம்பினார். அவர் நீண்டநாள் ஆவலுடன் காத்திருந்த தம் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டு அவர் ஒரு சிறிய மளிகைக் கடைக்கு அநேக பொருட்களை வாங்கும்படி சென்றார். பணம் செலுத்துமிடத்தில் அவர் எவ்வளவு பணம் தர வேண்டும் என்று கூறப்பட்டது. அவர் தனது பைக்குள் கை விட்டு, பணத்தை எடுத்து, சரியான தொகையை எண்ணி, அதை குமாஸ்தாவிடம் கொடுத்தார். தாம் வாங்கிய பொருட்களைப் பையில் போட்டுக் கொண்டு புறப்படத் தயாரானார். அவர் கதவைக் கடந்து வெளியேறும்போது, குமாஸ்தா, “மறுபடியும் வாங்க!” என்றார். அந்தப் பார்வையாளர் நின்று, பின்திரும்பி, பணம் செலுத்துமிடத்திற்குத் திரும்பவும் வந்தார். அந்த குமாஸ்தா அவரிடம், “நான் உங்களுக்கு உதவலாமா?” என்றார். குழம்பிப்போன அந்த மனிதர், “நீங்கள் என்னை மறுபடியும் வரச் சொன்னீர்களே!” என்றார்.

“பொருட்களை நீங்கள் வாங்கியதற்கு நன்றி; நாங்கள் விரைவிலேயே மறுபடியும் உங்களுக்கு உதவுவதற்கு விரும்புகின்றோம்” என்ற பொருள்படும் வகையில் அக்கடையில் உள்ளவர் அவ்வாறு கூறினார். அவர் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டதால் அங்கு செய்தித் தொடர்பில் ஒரு தவறு ஏற்பட்டது.

நாம் எல்லோருமே இவ்வித அனுபவத்தைப் பெற்றிருக்கக் கூடும். நம்மிடத்தில் பேசப்பட்ட வார்த்தைகளை நாம் புரிந்து கொண்டிருக்கின்றோம், ஆனால் பேசியவர் எந்த அர்த்தத்தில் பேசினார் என்பதை

நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம். நாம் வார்த்தைகளைப் புரிந்து கொண்டிருந்தும், அவை உணர்த்தும் அர்த்தத்தை முற்றிலுமாகத் தவற விட்டு விடுகின்றோம்.

எந்த வகையில் பார்த்தாலும், செய்தித் தொடர்பு என்பது கடினமானதாக உள்ளது. செய்தித் தொடர்பு சரியான முறையில் நடப்பதற்குப் பேசுபவரும் கேட்பவரும் நிறையச் செய்ய வேண்டியது தேவைப்படுகின்றது.

இந்த செய்தித் தொடர்புச் செயல் முறையை, வேதாகமத்தைப் படிப்பதற்கு நாம் நடைமுறைப்படுத்துவோம். வேதாகமத்திற்கும் நமக்கும் இடையில் பயனுள்ள செய்தித் தொடர்பு நடக்க வேண்டுமென்றால், பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை நாம் கவனித்தால் மட்டும் போதாது, ஆனால் ஏவப்பட்ட எழுத்தாளர்கள் அந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திய போது அவர்களின் சிந்தனையில் இருந்தது என்ன என்பதையும் நாம் தேடி அறிய வேண்டும். ஒரு வார்த்தை அல்லது வாக்கியம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி எடுக்க வேண்டும். தேவன் தமது செய்தியில் கூற வந்த பொருள் என்ன என்பதை நாம் நேர்மையான உணர்வுடன் தேடி அறிய வேண்டும்.

“சபை” என்ற வார்த்தை நம்மில் அநேகருக்கு மிகவும் பழக்கப் பட்டதாகும். இந்த வார்த்தையைப் பற்றி தேவன் வேதவசனங்களில் அதிகமாகவே பேசியிருக்கின்றார். இந்த வார்த்தையைப் பற்றி, தேவனுக்கும் நமக்கும் இடையில் சரியான முறையில் செய்தித் தொடர்பு நடக்க வேண்டுமென்றால், வேதாகம உலகத்தில் நாம் சென்று, இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு வேதாகம வார்த்தைகளை எழுதியவர்கள் ஆகியோர் கொடுத்துள்ள இந்த வார்த்தையின் அர்த்தம், விளக்கங்கள் மற்றும் அவர்களின் எண்ண உருவாக்கம் ஆகியவற்றை அறிவதற்கு விருப்ப முள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

“சபை” என்றால் என்ன? புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தியேழு புத்தகங்களில், பதினேழு புத்தகங்களில்[1] மட்டுமே வெவ்வேறு சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை 114 முறைகள்[2] பயன்படுத்தப் பட்டுள்ளதன் மூலம் நமக்கு அறிவிக்கப்படுவது என்ன? இயேசு தமது சபையை நிலை நாட்டியபோது, அவர் கட்டியது என்ன?

## ஆவிக்குரிய ஒரு சரீரம்

*சபை என்பது ஆவிக்குரிய ஒரு சரீரமாக, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவே இருக்கின்றது என்பதை முதலாவதாக நாம் உணர வேண்டும்.*

*''சபை'' என்ற வார்த்தைக்கு நமது சிந்தனையில் ஆராதனை நடக்கின்ற கட்டிடமே வழக்கமாய்த் தோன்றுவது இயல்பு. ஆயினும், இந்த அர்த்தத்தைக் கொடுக்கும் வகையில் புதிய ஏற்பாட்டின் எந்த இடத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை.*

*வேதவசனங்களில் "சபை" என்ற வார்த்தையானது, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, உள்ளூர் அளவில் கூடும் மக்கள் கூட்டத்தை அல்லது இந்நிலையில் உலக முழுவதும் இருக்கின்ற மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுவதாகவே இருக்கின்றது.*

*முதலாவதாக, இரட்சிக்கப்பட்டவர்களுடைய கூட்டம் தேவனை ஆராதிக்க ஒன்றுகூடி வருகையில் அவர்கள் "சபை" என்று அழைக்கப்படுகின்றனர். கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையார் ஒன்றுகூடுகையில் அவர்களிடம் ஒருமைப்பாடு குறைந்திருந்ததைக் கடிந்து கொள்ளுகையில் பவுல், கிறிஸ்தவர்களின் கூடுகையைக் குறிப்பிட "சபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அவர், ".... நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன் ..." (1 கொரி. 11:18) என்று கூறினார்.*

*அடுத்ததாக, ''சபை'' என்ற வார்த்தை குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் இரட்சிக்கப்பட்டவர்களின் அமைப்பைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. கொரிந்து பட்டணத்தில் இருந்த இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம், "கொரிந்துவிலே, ... இருக்கிற தேவனுடைய சபை ..." (1 கொரி. 1:2) என்று அழைக்கப்படுகின்றது.*

*இதற்கும் மேலாக, "சபை" என்ற வார்த்தையானது உலக முழுவதிலும் இரட்சிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரையும் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே. 5:23) என்று கூறும்போது பவுல், சபை என்பதை உலகளாவிய விதத்திலேயே குறிப்பிட்டார்.*

*''சபை'' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தல*

ருடைய நடபடிகளில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப் படும் விதத்தை நாம் நடைமுறைப்படுத்திப் பார்ப்போம். பெந்தெ கொஸ்தே நாள் அன்று எருசலேமில் தங்கியிருந்த அநேகரும், அங்கு வந்திருந்தவர்களும் (அப். 2:1-4) பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்டதன் வெளிப்படையான அடையாளங்களைக் கேட்டு, என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் காண அப்போஸ்தலர்களைச் சுற்றிக் கூடினார்கள். கூடியிருந்தவர்களுக்குப் பிரசங்கிக்கையில், பேதுரு அவர்களை, இயேசுவே கர்த்தராகவும் இரட்சகராகவும் இருக்கிறார் என்பதை நம்பச் செய்தார் (அப். 2:36). அநேகர் தங்கள் ஆத்தும பாரத்தோடு, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள் (அப். 2:37ஆ). அவர்களின் விசுவாசமே அவர்களை இவ்வாறு கதறும்படி தூண்டியது, எனவே அவர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று பேதுரு கூறத் தேவையில்லாதிருந்தது, ஆனால் அவர், அவர்கள் செய்யாதிருந்ததை-மனந்திரும்பி அவர்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதலை-அவர்களுக்குக் கூற வேண்டியிருந்தது (அப். 2:38). மூவாயிரம் பேர் இரட்சிப்பின் வழியைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, மனந்திரும்பி, பாவங் களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர் (அப். 2:38-41).

அந்த நாளில் என்ன நடந்தது என்று லூக்கா விளக்குவதைக் கவனியுங்கள். மனந்திரும்பியவர்கள் என்னவாக ஆனார்கள் என்பதை அவர், முதலாவதாக விளக்கினார் (அப். 2:41). கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்கள் கர்த்தருடைய சபைக்குள்ளாக்கப் பட்டார்கள். ஒரு குழுவின் ஒரே ஐக்கியத்தின் பாகமானார்கள். இரண்டாவதாக, அவர்களின் புதிய நடத்தையைப் பற்றி லூக்கா விளக்கினார். தேவனை நோக்கிய அவர்களின் நடத்தையில் அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றார்கள் (அப். 2:42). இரட்சிக்கப்பட்ட இந்த மக்கள் கூட்டத்தார் தேவனைத் தொழுதுகொண்டு, தெய்வீக அறிவுரைகளை அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார் கள். அவர்கள் ஒருவரொருவருடனான தங்கள் நடத்தையில் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றிருந்தார்கள் (அப். 2:44, 45). ஒருவரையொருவர் தாங்குதல், பகிர்ந்து கொள்ளுதல், அக்கறைப்படுதல் ஆகியவற்றின் மூலம் அவர்கள் ஒருவரையொருவர் கவனித்துக் கொண்டு-ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, தேவைகள் உள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டு, ஒருவர்மேல் ஒருவர் அக்கறையுள்ளவர்களாய் இருந்தார்

*கள். விசுவாசிகளின் கூட்டமாகிய இந்த சரீரம், நடபடிகளில் பின்னால், "சபை" என்று குறிப்பிடப்படுகின்றது (அப். 5:11).*

*எருசலேமில் இருந்த இந்த மீட்கப்பட்டவர்கள் தேவனை ஆராதிக்க ஒன்றுகூடுகையில், அவர்கள் "சபை"யாக (கூட்டமாகக் கூடிய வகையில்) இருந்தார்கள். எருசலேமிலிருந்த இரட்சிக்கப் பட்டவர்கள் அனைவரையும் "எருசலேமின் சபையார்" (உள்ளூர் என்ற வகையில்) என்று குறிப்பிடப்பட முடிந்தது. சபையானது வளர்ந்து பரவியபோது, உலகம் முழுவதிலும் அந்த சமயத்தில் இருந்த இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டத்தை "இயேசு மறுபடியும் வருகையில், தமது சபையை (உலகளாவிய வகையில்) ஏற்று அதைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றார்" என்று கூறும் போது, குறிப்பிடப் பட முடிந்தது.*

## வாழுகின்ற ஒரு உயிர்ப்பொருள்

*இரண்டாவதாக, சபையை நாம் ஒரு உயிர்ப்பொருளாக-வாழுகின்ற ஒன்றாகக் கண்ணோக்க வேண்டியிருக்கின்றது.*

*இரட்சிக்கப்பட்ட மக்கள் அடங்கிய, "சபை" என்று அழைக்கப் படுகின்ற குழுவைச் சிலர் ஒரு நிறுவனமாக, மனிதரால் ஏற்படுத்தப் பட்ட ஒரு வகைச் சங்கமாக எண்ணுகின்றார்கள். ஒருவர் அதில் சேருகின்றார் அல்லது தனக்கென்று உறுதியெடுத்துக் கொள்ளுகின்றார் என்பதற்கு மேலாக அதை அவர்கள் கண்ணோக்குவதில்லை.*

*இரட்சிக்கப்பட்ட மக்களின் அமைப்பு என்ற வகையில், சபையானது உயிருள்ள ஒரு பொருளாயிருக்கின்றது, இது ஒரு மனித நிறுவனம் அல்ல. கிறிஸ்து நிலைநாட்டிய சபையானது தேவனுடைய ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்களுடன் உயிர் வாழ்ந்து, உயிர்த்துடிப்புள்ள தாக இருக்கின்றது; மனித ஞானம், வடிவமைப்பு மற்றும் செயல்பாடு களால் மட்டுமே முழுமையாக சக்தியூட்டப்பட்ட, மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழுவாக இது இருப்பதில்லை.*

*கொரிந்துவில் இருந்த சபையைப் பவுல், ஆலயம், பரிசுத்த இடம் அல்லது தேவன் வாழும் இடம் என்று விளக்கப் படுத்தினார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்க ளென்றும், தேவனுடைய ஆவி உங்களின் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என்று அவர் 1 கொரி. 3:16ல் கூறினார்.[3] பின்னால், 1 கொரி. 6:19, 20ல் வேசித்தனம் என்பது தனியொரு கிறிஸ்தவர் தனது சரீரத்துக்கு*

எதிராகச் செய்யும் பாவம் என்று அவர் கண்டனம் செய்கையில், கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆலயமாயிருக்கின்றார் என்று பவுல் சித்தரிக்கின்றார். 1 கொரி. 3:16 ஆனது சபையைக் குறிப் பிடுவதாகும், அது தனியொரு கிறிஸ்தவரைக் குறிப்பிடுவதில்லை.[4] தேவன் தமது மக்களில் வாசம் பண்ணுவதைப் பவுல் உறுதிப் படுத்தினார். அவர் தனிப்பட்ட முறையிலும் (1 கொரி. 6:19, 20) மற்றும் கூட்டமைப்பு முறையிலும் (1 கொரி. 3:16) தமது மக்களில் வாசம் பண்ணுகின்றார். பழைய ஏற்பாட்டின் காலங்களில், வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரமும், பின்னாளில் எருசலேமின் ஆலயமும் தேவன் வாசம் பண்ணும் இடமாக இருந்தது; ஆனால் கிறிஸ்துவின் யுகத்தில், பவுலின் கூற்றுப்படி, தேவன் தமது சபையில், தமது மக்களில் வாசம் பண்ணுகின்றார்.

சபை என்பது உயிருள்ள ஒரு கட்டிடத்துடன் தொடர்பு படுத்தப் பட முடியும். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் என்னவாக ஆனார்கள் என்பதை விளக்கப்படுத்துகையில் பவுல், அவர்களை கிறிஸ்தவர் களால் அமைந்த ஒரு கட்டிடத்தில் இணைக்கப்பட்டு, தொடர்ந்து வளர்ச்சி நிலைகளை அடைபவர்களாயிருப்பதாகக் கூறினார். பவுல், “அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்” (எபே. 2:21, 22) என்று கூறினார். அவர் விளக்கிக் கூறிய அந்தக் கட்டிடம் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்ற அஸ்தி பாரத்தின்மேல் கிறிஸ்துவானவரையே பிரதான மூலைக் கல்லாகக் கொண்டு நிலைநிற்பதாக இருக்கின்றது. கட்டிடத்தின் மேல் கட்டுமானப் பகுதி கிறிஸ்தவர்களால் ஆனதாகும். இக்கட்டிடத்திற்கு மேல் பகுதி அல்லது கூரை என்பது இல்லை; சுவிசேஷத்திற்கு மக்கள் கீழ்ப்படிந்து இதனுடன் சேர்க்கப்படும்போது இது தொடர்ந்து மேல் நோக்கிக் கட்டப்படுகின்றது.

ஆகவே, சபை என்பது ஒரு நிறுவன அமைப்பல்ல-இது தேவனு டைய ஆவியானவர் வாசம் பண்ணுகின்ற ஒரு உயிருள்ள பொரு ளாகும். தேவனுடைய ஜீவனுடன் வாழுகின்ற, தேவனுடைய ஆவியா னவர் வாசம் பண்ணும் இடமாய் இருக்கின்ற கிறிஸ்தவர்களால் ஆன ஒரு சரீரமாகவே இந்த சபை இருக்கின்றது. சபை என்பதை தேவனு டைய பூமிக்குரிய வாசஸ்தலம் என்று நீங்கள் கூற முடியும்.

## உள்ளார்ந்த ஒரு உறவு

*மூன்றாவதாக, சபை என்பது கிறிஸ்துவுடன் உள்ளார்ந்த ஒரு உறவு கொண்டுள்ளதாக எண்ணப்படுதல் வேண்டும்.*

*பூமிக்குரிய கண்ணோட்டத்தில், சபையில் உறுப்பினராவது என்பதை, சபையாராக உள்ள மக்கள் குழுவுடன் ஒரு விசேஷித்த உறவு கொள்ளும்படிப் பிரவேசித்தல் என்று சிந்தித்துப் பார்ப்பது மிகவும் எளிதாயிருக்கும். ஆயினும் சபையைப் பற்றிய இந்தக் கண்ணோட்டமானது முக்கியமான ஒரு சத்தியத்தைத் தவற விடுகின்றது. சபை என்பது ஒரு இன்றியமையாத, உள்ளார்ந்த, தொடர்ந்து இருக்கின்ற உறவில் ஈடுபடுகின்றது; அந்த உறவானது இயேசுவுடனான ஒரு உள்ளார்ந்த உறவை மையமாகக் கொண்டுள்ளது.*

*சபையானது இயேசுவுடன் கொண்டுள்ள இந்தத் தொடர்ந்த உறவானது சரீரம்/தலை இவற்றின் உறவு என்று விளக்கப்படுமளவுக்கு மிகவும் நெருங்கியதாகும். கிறிஸ்தவர்கள் சரீரமாக இருக்கின்றனர், இயேசு தலையாக இருக்கின்றார். தேவன், சபையை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக, இன்று பூமியில் காணக்கூடாத கிறிஸ்துவின், காணக்கூடிய பாகமாக ஏற்படுத்தியுள்ளார். கர்த்தர் இந்த பூமியில் இருந்தபோது இரட்சிப்பிற்கான ஊழியத்தை நிறைவேற்ற அவருக்கு ஒரு சரீரம் தேவையாய் இருந்தது எவ்வளவு நிச்சயமோ, அந்த அளவுக்கு இப்பொழுது இரட்சிப்பிற்கான அவரது ஊழியத்தின் கனிகளை எங்கும் உள்ள, எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்வதற்கு அவருக்கு ஆவிக்குரிய சரீரம் ஒன்று தேவைப்படுவதும் நிச்சயமாகும். ஆகவே, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளில், பெந்தெகொஸ்தே நாளாகிய அன்று, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை ஏற்படுத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார். அந்த நாள் தொடங்கி, இன்று வரையிலும் இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரும், அவர் இரட்சிக்கப்படும் வேளையில், தேவனுடைய அற்புதமான கிருபையினால் அந்த சரீரத்திற்குள்ளாக்கப்படுகின்றார்.*

*இவ்விதமாகவே புதிய ஏற்பாட்டில் உள்ள சபையானது, ஏவப் பட்ட எழுத்தாளர்களால், கிறிஸ்துவின் "சரீரம்" என்று அழைக்கப் படுகின்றது (எபே. 1:21-23; 5:23). கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகின்றவர்கள் யாவரும் பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய*

சரீரமாக ஆகி, கிறிஸ்து என்ற தலையினாலேயே வழி நடத்தப்படுகின்றார்கள். எனவே ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் ''கிறிஸ்துவுக்குள்'' (ரோமர் 6:3; கலா. 3:27), அல்லது ''ஒரே சரீரத்துக்குள்" (1 கொரி. 12:13) ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றார் என்று புதிய ஏற்பாடு குறிப்பாகக் கூறுவது உண்மையாகும்.

இந்த பூமியிலிருக்கும்போது ஒருவர் பிரவேசிக்க முடிகின்றதான சபையானது இயேசுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. சபை என்பதே கிறிஸ்துவின் நிறைவாய் இருக்கின்றது, ஏனெனில் அவருடைய சரீரமே எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாக இருக்கின்றது (எபே. 1:23). கிறிஸ்துவே சபையின் நிறைவாக இருக்கின்றார், ஏனெனில் அவருடைய மக்கள் அவரில்தான் முழுமை அடைகின்றார்கள் (கொலோ. 2:10). சபையாகிய அவருடைய சரீரமானது கிறிஸ்து என்ற தலையில்லாமல் இருந்தால் முழுமையடையாததாக இருக்கின்றது (எபே. 1:23). இது போலவே, தலையாகிய கிறிஸ்துவும் அவரது சரீரமாகிய சபை இல்லாதிருந்தால் முழுமையடையாதவராகவே இருப்பார் (கொலோ. 1:18). சபையின் எல்லாமுமாக உள்ள தலையானது சபைக்கே உரியதாய் இருக்கின்றது, மற்றும் சபையின் எல்லாமும் அதன் தலையாகிய கிறிஸ்துவுக்கே உரியதாய் இருக்க வேண்டும். ஆகையால், அவருடைய சபை என்ற வகையில் கிறிஸ்தவர்கள் இயேசுவுடன் அன்றாடம் தொடருகின்ற ஒரு இணைவு நிலையை அனுபவிக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் கிறிஸ்தவத்தின் பேராசிரியர்களாக மட்டுமின்றி, கிறிஸ்துவைத் தங்கள் உடமையாகப் பெற்றிருப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். அவரது சரீரத்திற்குள்ளாக இருப்பவர்களுக்கு கிறிஸ்துவின் நிறைவாகிய ஊற்று திறக்கப்பட்டுள்ளது.

எபேசியர் 5ல் பவுல், சபையைக் குறித்து விவாதிக்கையில், கிறிஸ்துவுடன் சபைக்குள்ள உறவை, அவர் கணவன்/மனைவி உறவை உருவகம் செய்து ஒப்பிடுகின்றார். இதில் அவர் கணவராகக் கிறிஸ்துவையும், மனைவியாக அவரது சபையையும் விளக்கிக் கூறுகின்றார். இந்த உறவை முதலாவதாக அவர் கொள்கை அடிப்படையில் குறிப்பிட்டார். கணவன், மனைவிக்குத் தலையாயிருக்கிறது போலவே, கிறிஸ்துவும் சபைக்குத் தலையாயிருக்கின்றார் (எபே. 5:23). இந்த உறவை இரண்டாவதாக அவர் நடைமுறை அல்லது செயல்பாட்டின் அடிப்படையில் பேசினார். மனைவி தன் கணவருக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப்படிவது போல, சபையானது எல்லா

விஷயங்களிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். சபையானது கிறிஸ்துவைத் தனது தலையாக, முன்னோடியாக, மற்றும் வழிகாட்டி யாக நோக்க வேண்டும் (எபே. 5:24). நிறைவாக பவுல் இந்த உறவை நோக்கத்தின் அடிப்படையில் விவாதித்தார். கணவர் தம் மனைவி யிடம் அன்பு கூருகிறது போலவே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, விசுவாசிகள் அடங்கிய இந்த சரீரமானது அவருடைய நித்தியத்திற்கும் வாழ்வதற்கு அதை ஆயத்தப்படுத்துகின்றார் (எபே. 5:25-27).

புதிய ஏற்பாட்டின் சபையானது கிறிஸ்துவுடனான உறவு ஒன்றைத் தனது இருதயம் போன்ற மையப்பகுதியாகக் கொண் டுள்ளது. இது மனிதர்களுடன் உள்ள உறவை தொடக்க நிலையில் கொண்டிராவிட்டாலும், சபையின் மற்ற உறுப்பினர்களுடன் ஒரே தகப்பனுடைய பிள்ளைகள் என்ற வகையில் உள்ள மற்ற கிறிஸ்தவர் களுடன் உறவு கொள்வதற்கு உடனடி விளைவை ஏற்படுத்துகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு உறுப்பினராக இருக்கின்றனர், ஆனால் முதலாவதும், முதன்மையானதும் என்னவென்றால், சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது என்பதே ஆகும். கிறிஸ்துவின் சபையில் உறுப்பின ராயிருக்க வேண்டுமென்றால், சரீரமானது எப்படி தலைக்குச் சொந்த மானதாக இருக்கின்றதோ அது போன்ற நெருங்கிய மற்றும் விசேஷித்த உறவில் நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க வேண்டும்.

## முடிவுரை

"சபை" என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தைப் பொறுத்த மட்டில் அநேகர் குழப்பமடைந்த நிலையில் இருக்கின்றார்கள். வேதாகமம் இதன் அர்த்தத்தைத் தெளிவாகக் கொண்டுள்ளதால் அப்படிப்பட்ட குழப்பம் எதுவும் இருக்கத் தேவையில்லை.

''சபை'' என்றால் என்ன? கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய மக்களாகி, சமுதாயத்தில் அவரது மக்களாக அவரை ஆராதித்து, அவருக்கென்று ஊழியம் செய்யும் மக்களைக் கொண்ட ஆவிக்குரிய சரீரமே சபை என்னப்படுகின்றது. அவர்கள் அவரது பெயரைத் தரித்துக் கொண்டு, இந்த பூமியில் அவருடைய ஆவிக்குரிய சரீரமாய் இருக்கின்றனர். அவர்கள் எல்லா விஷயங் களிலும் கிறிஸ்துவைக் கனப்படுத்துகின்றனர். இந்த ஆவிக்குரிய சரீரமானது ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் வாசம் பண்ணும்

*ஒரு உயிர்ப்பொருளாக இருக்கின்றது. இந்த சபையின் அங்கமாக இருப்பது என்றால், மனித நிறுவனம் ஒன்றில் பங்கேற்பது என்றோ அல்லது ஒரு குழுவில் உறுப்பினராவது என்றோ அர்த்தமல்ல. கிறிஸ்துவோடு நெருங்கிய மற்றும் என்றும் தொடர்கின்ற உறவைப் பெற்றுக் கொள்வது என்பதே இதன் அர்த்தமாகும்.*

*கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் விசுவாசத்தினாலேயே பிரவேசிக்க முடியும். இந்த விசுவாச பதில்செய்கையானது மனந்திரும்புதலை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் (அப். 17:30, 31), மற்றும் அது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தல் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் (ரோமர் 6:3; கலா. 3:27) ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தின்போது ஒருவருடைய பாவங்கள் கழுவப்படுகின்றன, அவர் புதுப்பிறப்பெடுத்து முடியும் போது அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாகின்றார் (அப். 2:38, 41, 47; 22:16; 1 கொரி. 12:13).*

*புதிய ஏற்பாட்டின் சபை என்பது ஒரு நாமகரணக் கூட்டம் அல்ல. நாமகரணக் கூட்டங்கள் என்பவை மனிதரால் உண்டாக்கப்பட்டவை களாகும்; புதிய ஏற்பாட்டின் சபை என்பது கர்த்தரால் வடிவமைக்கப் பட்டு, படைக்கப்பட்டு, அவர் வாசம்பண்ணி நிலைநிறுத்துகின்ற ஒன்றாக இருக்கின்றது. நாமகரணக் கூட்டங்கள் என்பவை பூமியில், மனிதர்களிடத்திலிருந்து உண்டாகின்றன; புதிய ஏற்பாட்டின் சபையோ பரலோகத்தில் தேவனிடமிருந்து உண்டானதாக இருக்கின்றது. சபை கிறிஸ்துவுக்கே உரியது-அது அவரது பெயரைத் தரித்துக் கொள்ளுகின்றது, அவரது ஆராதனைக்கென்று ஒன்று கூடுகின்றது, உலகத்தில் அவரது ஊழியத்தைச் செய்கின்றது, மற்றும் அவரது ஆவி அதற்குள் வாசமாயிருக்கிறது. ("புதிய ஏற்பாட்டின் சபை" என்ற தலைப்பிடப்பட்ட வரைபடத்தைக் காணவும்.)*

*எல்லா மக்களும் கிறிஸ்துவின் இரட்சிப்புக்குரிய நிபந்தனை களுக்குட்பட்டு அவரது சபைக்குள் பிரவேசிக்கும்படியும், உலகத்தில் அவரது சபையாக வாழும்படியும் கிறிஸ்துவால் அழைப்பு விடுவிக்கப் படுகின்றது (வெளி. 22:17).*

## பாட வினாக்கள்

*(விடைகள் 312 ம் பக்கங்களில்)*

1. *பரிசுத்த ஆவியானவர் ஒரு வார்த்தையை, அதிலும் "சபை" என்ற வார்த்தையை வேதவசனங்களில் எவ்விதம் பயன்படுத்துகின்றார் என்பதைப் புரிந்து கொள்வது எவ்வளவு அவசியமானதாய் இருக்கின்றது?*
2. *புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ள வித்தியாசமான வழிமுறைகளைப் பற்றி விவாதித்து அறியவும்.*
3. *சபை என்பது தேவனுடைய ஆலயமாயிருக்கின்றது. இது இன்றைய கிறிஸ்தவ வாழ்வில் எதை அர்த்தப்படுத்துகின்றது? சபைக்கான இந்தப் பெயர் இதன் உறுப்பினர்கள் எப்படி வாழ்ந்து, ஊழியம் செய்து மற்றும் ஆராதிக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாய் இருக்கின்றதா?*
4. *சபை என்பது எந்த வகையில் "உயிருள்ள" ஒரு கட்டிடமாய் இருக்கின்றது?*
5. *இயேசுவுக்கும் சபைக்கும் உள்ள உறவை, கணவன்/மனைவி உறவானது என்னென்ன வழிமுறைகளில் விளக்கப் படுத்துகின்றது?*
6. *கிறிஸ்துவின் சபைக்குள் ஒருவர் பிரவேசிப்பது எப்படி என்பதைத் தெளிவாக விளக்கவும்.*
7. *சபையானது எவ்வகையில் கிறிஸ்துவுக்கு மட்டுமே தனிப்பட்ட விதத்தில் சொந்தமுள்ளதாய் இருக்கின்றது?*

# வார்த்தை உதவிகள்

***நாமகரணக் கூட்டம்*** *- சபைக்கென்று வேதாகமத்தில் காணப் படாத பெயரைத் தரித்துக் கொண்ட, ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை களின் அடிப்படையில் அமையப் பெற்ற, ஏதோ ஒருவகை ஆலோ சனைக் குழுவால் ஆட்சி செய்யப்படுகின்ற, மார்க்கரீதியில் தங்களை சபை என்று அழைத்துக் கொள்ளுகின்ற மக்களின் கூட்டம். நாமகரணக் கூட்டங்களின் பெயர் எதுவும் சபையின் பெயராகப் புதிய ஏற்பாட்டில் காணப்படாதபடியால் இது வேதாகமத்தின்படியான வார்த்தையல்ல.*

**ஐக்கியம்** - அக்கறைகள், கொள்கைகள் அல்லது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்; ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பினால் கிறிஸ்தவர்களின் இதயம் நிரப்பப்படுதல்.

**வேசித்தனம்** - பாலியல் ரீதியான பாவம்; திருமணமாகாமலேயே பாலியல் தொடர்பு கொள்ளுதல்.

---

[1]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (Grand Rapids, Mich.: Zondervan, 1975), 153. [2]Ibid. *"சபை" என்ற வார்த்தை மாற்கு, லூக்கா, யோவான், 2 தீமோத்தேயு, தீத்து, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான் மற்றும் யூதா நிருபம் ஆகிய புத்தகங்களில் இல்லை.* [3]*ஆலயம் என்பதற்குக் கிரேக்க மொழியில் இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன: naos மற்றும் hieron. இவ்வசனப்பகுதியில் "ஆலயம்" என்ற வார்த்தைக்குப் பவுல் naos என்ற வார்த்தையையே பயன்படுத்தினார், hieron என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. Hieron என்ற வார்த்தை ஆலய வளாக முழுவதையும் குறிப்பிடுகின்றது, ஆனால்* naos *என்ற வார்த்தையோ ஆலயத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தைக் குறிப்பிடுவதாய் உள்ளது. கிறிஸ்துவின் சரீரம் என்பது தேவன் வாசம் செய்யும் இடம் என்று பவுல் உறுதிப்படுத்தினார்.* [4]*இந்த வாக்கியத்தில் "நீங்கள்" என்ற வார்த்தை கிரேக்க வசனத்தில் முன்னிலைப் பன்மையில் உள்ளது, இது மக்கள் குழு ஒன்றைச் சுட்டிக் காட்டுவதாய் இருக்கின்றது, 1 கொரி. 6:19, 20ல் உள்ளது போல தனி நபரைச் சுட்டிக்காட்டுவதாக இது இருப்பதில்லை.*